# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### நாகபட்டினம் - காங்கேசன்துறை
### பயணிகள் படகு சேவைக்கான நிதி உதவி நீடிப்பு

நாகபட்டினம் மற்றும் காங்கேசன்துறை இடையிலான பயணிகள் படகு சேவையை மேம்படுத்தும் நோக்குடன் மேலும் ஒரு வருடத்திற்கு நிதி உதவியை நீடிக்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. 2024 ஆகஸ்ட் மாதம் இந்த படகு சேவை மீண்டும் தொடங்கப்பட்டதிலிருந்து, இந்திய அரசசாங்கம் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இந்த நிதி ஆதரவை வழங்குகிறது.. இரு நாடுகளுக்கும் இடையிலான பிராந்திய இணைப்பை மேம்படுத்துவதற்கும் இரு நாட்டு மக்களிடையேயான தொடர்புகளை வலுப்படுத்துவதற்குமான இந்தியாவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்புக்கு அமைவாக இந்த நீடிப்பு மேற்கொள்ளப்பட்டது.

2. சாத்தியக்கூற்று இடைவெளி நிரப்பு Viability Gap Funding (VGF) நிதி பொறிமுறையின் கீழ் இந்நிதி உதவி வழங்கப்படுகிறது, ஆண்டுதோறும் இலங்கை ரூபா 300 மில்லியன் இவ்வாறு வழங்கப்படுகின்றது. முன்னைய ஆண்டைப் போலவே, இயக்க மற்றும் செயற்பாட்டு செலவுகளை ஈடுகட்டுவதன் மூலம் மலிவான சேவை மற்றும் செயற்பாட்டு ஸ்திரத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்த ஆதரவு வழங்கப்படுகின்றது.

3. இப்படகு சேவையானது ஆகஸ்ட் 2024 இல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமை முதல் 52000 க்கும் மேற்பட்ட பயணிகள் இச்சேவை மூலமாக பயணித்துள்ளனர். இது இந்தியா மற்றும் இலங்கை இடையிலான கலாசார, பொருளாதார மற்றும் சமூக பரிமாற்றங்களை வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான கடல் மார்க்கமான தொடர்புகளுக்கு புத்துயிரளிப்பதில் இது ஒரு முக்கிய மைல்கல்லாகும்.

4. 2024 டிசம்பரில் இலங்கை ஜனாதிபதி அவர்கள் மேற்கொண்ட இந்திய விஜயத்தின் போதும், 2025 ஏப்ரலில் இந்தியப் பிரதமர் அவர்கள் மேற்கொண்ட இலங்கை விஜயத்தின்போதும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டமைக்கு அமைவாக, மேம்பட்ட கடல்சார் இணைப்புக்கான பகிரப்பட்ட தொலைநோக்குப் பார்வையுடன் ஒத்திசைவானதாக இப்படகு சேவைக்கான நிதி உதவியினை நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

5. இதேவேளை எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்களில், இந்தியாவின் 65 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடை உதவியின் கீழ் காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைத்தல், கடல் மார்க்கமான இணைப்பை மேலும் விரிவுபடுத்தவும், இந்தியா மற்றும் இலங்கை இடையிலான பொருளாதார மற்றும் மக்களுக்கிடையிலான பிணைப்புகளை மேலும் ஆழப்படுத்தவும் மேலதிக வழித்தடங்கள் மற்றும் சேவைகளை உருவாக்குவது குறித்து பரிசீலித்தல் ஆகியவை உள்ளடங்குகின்றன.

***********

**கொழும்பு**
**18 செப்டெம்பர் 2026**